**ஜெ ஜெயலலிதா**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

தேதி 11.6.2011

## குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினச் செய்தி

குழந்தைப் பருவம் குதூகலமாய், வண்ணத்துப் பூச்சிகளாய் விளையாடித் துள்ளித் திரியும் காலம். பள்ளி சென்று பயில வேண்டிய காலம். குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து, மேம்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, பராமரிக்க வேண்டியது நமது கடமையாகும்.

நமது நாட்டில் அறிவும், வலிமையும் பொருந்திய தலைமுறையாக உருவாக வேண்டிய ஆயிரக்கணக்கான குழந்தைகள், கடும் உடல் உழைப்பின் சுமையால் நசுக்கப்படுகின்றனர். இக்குழந்தைகளை உடல் உழைப்பின் நிர்பந்தத்திலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இயல்பான வளர்ச்சியை உறுதி செய்வது நமது தலையாய கடமையாகும்.

குழந்தை பருவம் என்பது குழந்தைகளுக்கு இயற்கையாகவே அமைந்திட்ட உரிமையாகும். அந்த உரிமையை அவர்களிடமிருந்து பறிப்பது இயற்கை நியதிக்கும், சமூக நீதிக்கும் புறம்பானது என்பதை கருத்திற்கொண்டு, உலகெங்கும் ஜூன் 12-ம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இந்த நாளில் நாம் அனைவரும் நம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப உறுதி ஏற்போம் ! குழந்தைகள் பணிக்கு செல்வதைக் கண்டால் அவர்களை தடுத்து பள்ளிக்கு அனுப்பி வைப்போம் ! குழந்தைத் தொழிலாளர் முறை என்னும் சமூக அவலம் நீக்கப்பட சமுதாயத்தில் உள்ள அனைவரும் உறுதியேற்போம் !

தமிழகத்தை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க தமிழக அரசு மேற்கொள்ளும் சீரிய முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பை நல்கி, தங்கள் ஆதரவினை தர வேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றிடுவோம் !

குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவோம் !

செய்திக் குறிப்பு: 54

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9**